**நெல் சந்தைப்படுத்தல் சபைய - 2018**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் கருத்தை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் பிரிவில் விவாதிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, சபையின் நிதி அறிக்கைகள் குறித்து நான் கருத்து தெரிவிக்கவில்லை.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள தொடர்பாக முக்கியத்துவம் காரணமாக, இந்த நிதிநிலை அறிக்கைகள் குறித்து நான் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபை நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சுபை செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு

பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07** | | |
| (i) மீளாய்வாண்டில் பாலத்தராசு கொள்வனவு செய்வதற்காக சபையினால் ரூபா 11,010,650 வழங்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றின் படி ரூபா 5,395,090 செலுத்தப்பட வேண்டிய நிலுவை உட்பட பாலத்தராசு கொள்வனவு செய்வதற்கு ரூபா 16,405,740 ஆக பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி செயற்பட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப செயல்படல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளுக்காக ரூபா 63,335,231ஆனது கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 44,101,692 முதலீட்டுக் கொடுப்பனவாக காணப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி செயற்பட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப செயல்படல் வேண்டும். |
| **(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16** | | |
| இந்நியமத்தின் 51 ஆவது பந்திக்கமைய 2014 ஆம் ஆண்டில் நடைமுறையல்லாச் சொத்துகளின் பயன்பாட்டு ஆயுட்காலத்தினை மதிப்பீடு செய்யப்படாததன் விளைவாக சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 4,654,646 ஆனது முழுமையாக பெறுமானத்தேய்வடைந்துள்ளன. அச்சொத்துக்களின் பெறுமதியானது சொத்துக்களின் பெறுமதியினுள் காணப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சொத்துக்களினை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்து கணிப்பீட்டினை நடத்துவதற்கும் இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப செயல்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆண்டிற்கான சபையின் இருப்பானது ரூபா 3,047,107,163 ஆனது குறைவாக காட்டப்பட்டுள்ளதுடன். இருப்பு குறைவினை நிதி செயலாற்றல் கூற்றுடன் ஒப்பிட்டு நட்டத்தினை கணிப்பிட்டு அதனை பெறப்பட வேண்டியவர்களிலிருந்து குறைத்து நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | சரியான கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 353,190 பெறுமதியான பாலம் அளவீட்டு சேவைக்கான கொடுப்பனவானது நேர் மேந்தலையாக காட்டப்படுதல் வேண்டும். ஆனால் அச்செலவினமானது நிர்வாகச் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் அதை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சரியான கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வங்கி மீதி | 153,792,930 | 45,000 | 157,747,950 | வங்கி மீதி தொடர்பான சரியான தகவலினை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றினை இணங்க செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| களஞ்சிய காப்பாளர்களினால் காரணமாக இருப்பு குறைபாடுகள் | 6,615,555 | 5,903,501 | 712,054 | இவை தொடர்பான முதல் கணிப்பீட்டின் போது பிழையாக கணிப்பிடப்பட்டிருந்ததுடன் அவை சரியாக பதில் அறிக்கையில் அறிக்கையிடப்பட்டிருந்தன. அதன் படி சரியான தொகையாக ரூபா 5,903,501 ஆக காணப்பட்டது. | வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றினை இணங்க செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| கூட்டுறவு மொத்த விற்பனை | 1,467,190,102 | 1,070,666,192 | 396,523,910 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றினை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிலையத்திலிருந்து பெறப்பட வேண்டிய மீதிகள் | | | | | நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மீதி | 1,202,897 | 85,711,719 | 84,508,822 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றினை இணங்க செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இனங்காணப்படாத நெல் கொள்வனவு | 63,980,963 | | | |
| (ஆ) | கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 49,743,530 | | | |
| (இ) | Rice Millers இற்கு கடனுக்கு விற்பனை | 44,399,804 | விரிவான தகவல்கள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல் | | |
| (ஈ) | இலங்கை வங்கியிலிருந்து பெறவேண்டிய மீதி | 3,282,807 | | வெளிப்படுத்தப்படும் முறைமைகளை தேவைக்கேற்ப முன்னேற்றப்படும் | |
| (உ) | மக்கள் வங்கியிலிருந்து பெறவேண்டிய மீதி | 1,691,330 | | | கணக்கிற்கான விடயங்களை சரிபார்ப்பதற்கான தேவைகளுக்கு ஆவணங்கள் பேணப்பட வேண்டும். |
| (ஊ) | லங்கா சதொசா | 77,526,708 | | | |
| (எ) | அம்பாறை மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்பட வேண்டிய மீதி | 2,458,086 | | | |
| (ஏ) | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்பட வேண்டிய மீதி | 18,351,743 | மீதிகளை உறுதிப்படுத்துதல் | | |
| (ஐ) | ஆமைச்சுக்களிலிருந்து பெறப்பட வேண்டிய தொகை | 296,842,875 | | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் கடன்பட்டோர் மீதியாக ரூபா 2,748,583,551காணப்படுகின்றது. இவற்றில் 05 வருடங்களுக்கு மேலாக கடன்பட்டோர் நிலுவை ரூபா 1,526,262,593 ஆகவும் 05 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கடன்பட்டோர் நிலுவை ரூபா 409,217,648 ஆகவும் 03 வருடத்திற்கும் 01 வருடத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கடன்பட்டோர் நிலுவை ரூபா 813,103,310 ஆகக் காணப்படுகின்றது. இம்மீதிகளை அறவிட்டுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31இன் பிரகாரம் 01 தொடக்கம் 03 வருடத்திற்கு இடைப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 813,103,310 ஆகவும் சதொசா நிலையத்திலிருந்து நன்கொடையாக ரூபா 75 மில்லியன் பெறப்பட்டிருந்தன. இதனால் மீதிகள் ரூபா 738,103,310 இனால் குறைவடைந்து காணப்படுகின்றன. 05 வருடத்திற்கு மேற்பட்ட மீதியாக ரூபா 1,526,262,593 மீதியிலிருந்து ரூபா 3,094,578 பெறப்பட்டிருந்தினால் மீதி ரூபா 1,523,168,014 ஆக குறைவடைந்து காணப்படுகின்றது. | கடன்பட்டோர் மீதியிலிருந்து பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் சந்தை கடன் மீதியின் கீழிலிருந்த உணவு ஆணையாளர் திணைக்களத்திலிருந்து ரூபா 425,951,745 பெறுமதியானது பெறப்பட்டிருந்ததுடன் மற்றும் ரூபா 10,591,838 மீதியானது பனை அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறப்பட்டிருந்தன. சபையின் மீதியினை உறுதிப்படுத்தி வழங்கப்பட்டிருந்த கடன் நிலுவையானது ரூபா 700,000 இனை விட வேறு கடன்பட்டோர் மீதிகள் காணப்படவில்லை என எழுத்து மூலம் வழங்கப்பட்டிருந்தன. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | மீதிகளினை சரியாக முறையில் உறுதிப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் சந்தை கடன் மீதியின் கீழிலிருந்த கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட வேண்டிய தொகையாக ரூபா 1,467,190,102 அம்மீதியினை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,070,666,192 ஆக மீதிகளுக்கு இடையில் ரூபா 396,523,910 ஆக மீதியானது வேறுபட்டுக் காணப்படுகின்றன. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | மீதிகளினை சரியாக முறையில் உறுதிப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய நிலுவை ரூபா 6,971,705,394 ஆக காணப்பட்டன. இவற்றில் 04 வருடதிற்கு மேலாக காணப்படுகின்ற நிலுவை ரூபா 281,665,114 ஆகவும் 03 வருடம் தொடக்கம் 04 வருடத்திற்கு இடைப்பட்ட நிலுவைப் பெறுமதியாக ரூபா 6,434,633,563 ஆகவும் 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட நிலுவையாக ரூபா 5,378,637ஆகவும் மற்றும் 01 வருடத்திற்கு மேற்பட்ட கடன் நிலுவை ரூபா 250,028,080 ஆகவுள்ளது. இந்நிலுவைகளில் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை ரூபா 6,684,554,538 பெறுமதியானது 2019 நவம்பர் 30ஆம் திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கடன்களைத் தீர்க்க போதுமான நிதி காணப்படவில்லை. அமைச்சரவை ஒப்புதல் அளித்தபடி இலக்கம் 18/0526/732/007 மற்றும் 31.03.2018 திகதியிடப்பட்டதற்கிணங்க நெல் சந்தைப்படுத்தல் சபையினால் செலுத்த வேண்டிய வங்கிக் கடன்களை நீண்ட கால கடனாக திறைசேரினால் கழிக்கப்பட வேண்டும். நிலைமைக்கு தீர்வு காணவும், அரிசி உற்பத்தி செயல்முறை மூலம் பெறப்பட்ட கடன் நிலுவைகளை தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது | கடன் நிலுவைகளை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)2016 செப்டம்பர் 19 ஆம் திகதியிடப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 1/2016(i) | தலைவரின் உத்தியோகபூர்வ கடமைகளுக்கான ஒரு வாகனத்திற்கான அதிகபட்ச மாத வாடகை ரூபா 200,000 என்றாலும், அதிகபட்ச மாத வாடகை எல்லையை மீறி ரூபா 848,800 வழங்கப்பட்டுள்ளது. | நிறுவனத் தலைவரின் உத்தரவாதம் மற்றும் ஒப்புதலின் கீழ் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேணடும். |
| (ஆ)2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் PED1/2015 | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதுமானதாக இல்லாதபோது, இயக்குநர்கள் குழுவின் பரிந்துரையுடன் வரிசை அமைச்சின் செயலாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும். செயலாளரின் ஒப்புதல் பெறாமல் 482,285 செலுத்தப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேணடும். . |
| (இ)2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் PED/12 | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் இதுவரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்க சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகிறது. | ஆண்டறிக்கைகள் உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் சபையின் நிதிப் பெறுபேறு ரூபா 1,185,101,723 நட்டத்தைக் காட்டியது. இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 462,105,320ஆக இருந்தபோதும் சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் நிதிப் பெறுபேறானது ரூபா 722,996,403 நலிவை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 7,393,955,928 ஆல் குறைவடைந்திருந்த போதும் நிர்வாகசெலவு ரூபா 46,576,479 மற்றும் நிதிச் செலவு ரூபா 85,057,531 ஆக அதிகரித்தும் விற்பனைக் கிரயம் ரூபா 6,732,090,785 இனால் குறைவாகவும் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 25,376,291 ஆல் அதிகரித்தமையே மேலே கூறப்பட்ட அதிகரிப்புக்கு பிரதானமான காரணியாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2015 ஆம் ஆண்டிற்கான சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பாக விவாசாய, கால்நடைகள், வளங்கள் அபிவிருத்தி ,நீர்வடிகால் மற்றும் மீன்பிடி மற்றும் நீர்வளங்கல் அபிவிருத்தி அமைச்சரினால் 2019 யூலை 05 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை MF/PE/CM/2019/145 இலக்க கடிதத்தில் மற்றும் 2019 ஆகஸ்ட் 05 ஆம் திகதியில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க முறையான மொத்த கட்டுப்பாட்டு அமைப்பு விரைவாக நிர்மாணிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்த போதிலும் சபையினால் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மொத்த கட்டுப்பாட்டு அமைப்பின் நடவடிக்கை நாளாதுவரை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.<br>2019 நவம்பர் 15 ஆம் திகதி வரை நிர்மாணிப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்கு ரூபா 18,328,337ஆக மற்றும் VPN ( Vertical Private Networks) ஆன கொடுப்பனவுகள் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டிற்கான கூட்டு மொத்த ரூபா 4,792,595 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | உடனடியாக பொருத்தமான முறைமைகளை நிறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்டிருந்தன. 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதியில் சபையினால் மீண்டும் கணணிமயப்படுத்தப்பட்ட மொத்த கட்டுப்பாட்டு அமைப்பினை நிர்மாணிப்பது தொடர்பான இலங்கை அறக்கட்டளை நிலையத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டதுடன் முற்பணமாக ரூபா 360,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. இதன் அடிப்படையில் 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை செலவு செய்யப்பட்ட ரூபா 23,120,932 சிக்கனமற்ற கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது. | | |

### 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ)2012 ஆம் வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நெல் இறக்குமதி திட்டம் தொடர்பாக திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகையானது தனியார் நெல் ஆலைக்கு வழங்கப்பட்டு அதனை அரிசியாக பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்துடன் நெல் தொகையானது வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் 06 நெல் ஆலைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நெல் தொகையானது 143,735,794 கிலோ கிராமினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் 2014 நவம்பர் 21 ஆம் திகதி முறைபாடு செய்யப்பட்டிருந்த போதிலும் நாளாதுவரை உரிய பெறுமதியை வசூலிக்கப்படாமல் காணப்பட்டது. மேலும், 4 நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,545,126 இனை பகுதி அடிப்படையில் மீளப் பெற்றுக்கொள்ளப்படாமல் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் ஒப்பந்தம் காணப்பட்டிருந்த | 2017.08.21, 2018.04.04, 2019.07.01 மற்றும் 2019.09.02 ஆகிய திகதிகளில் குற்றவியல் விசாரணை திணைக்களத்திடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளன. இருப்பினும் அதற்கு அவர்களினால் எங்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>தற்போது ஒப்பந்தம் மற்றும் ஆவணங்களில் குறைபாடுகள் காணப்பட் 25 நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகையை பெற்றுக்கொள்வதற்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. 06 ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக பூர்வாங்க பொலிஸ் புகார்களை பதிவு செய்வதற்காக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் அம்பாறை பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. | ஆலை உரிமையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் உடன்படிக்கைக்கு இணங்க மீளப் பெற்றுக்கொள்ளாமல் காணப்பட்டது. ஓப்பந்தம் மற்றும் ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக 25 நெல் ஆலையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 45,485,788 இனை மீள பெற்றுக்கொள்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியாமல் காணப்பட்டதுடன் மேலும் 06 நெல் ஆலை உரிமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 16,181,975 இனை பெற்றுக்கொள்வதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ)தனியார் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கடன் அடிப்படையில் நெல் இருப்புக்களை வழங்குவதற்கு 2011 ஆகஸ்ட் 22 ஆம் திகதியில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் மேலதிக செயலாளரினால் சிரிரி/5/6/11 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டது. நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் தொகை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம் 2.1ஆவது பந்திக்கமைய நெல் தொகை வழங்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நெல்லுக்கான பெறுமதிகள் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும நெல் வழங்கப்பட்டு இன்றை வரை 09 ஆண்டுகளுக்கு மேலாக 09 நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய 2,900,000 கிலோ கிராம் நெல்லுக்கான பெறுமதி ரூபா 69,955,341 ஆனது பெறப்படவில்லை. 2019 நவம்பர் 15 ஆம் திகதியில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட போது சபையானது அத்திகதி வரை பணத்தினை அறவிட்டுக்கொள்ள தவறிவிட்டது. | தனியார் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கடன் அடிப்படையில் நெல் வழங்கப்பட்டதற்கு எதிராக குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் 09 தனியார் நெல் ஆலை உரிமையாளர்யர்களுடைய ஆவணங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் மேலும், இந்த திட்டத்தை ஆரம்பித்த காலப்பகுதியிலான பிரதம செயலாளர் கைது செய்யப்பட்டு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | ஆலை உரிமையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2017 ஆம் ஆண்டில் சபபையின் கிளிநொச்சி, நிகாவரட்டியா மற்றும் அம்பாறை பிரதேசங்களுக்கு ரூபா 8,970,000 செலவில் மூன்று பால தராசுகள் அமைக்கப்பட்டிருந்தன. 2019 நவம்பர் 15ஆம் திகதியில் பாலத் தராசுகள் கட்டப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாக காணப்பட்டிருந்தன. இந்த தராசுகள் எடைக்கு பயன்படுத்தப்படவில்லை. பெறுகை வழிகாட்டுதலின் அத்தியாயம் 02 இன் பிரிவு 2.3.1 (அ) இன் ஆரம்ப சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்கள் பரிசீலிக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும், இந்த காரணிகளில் கவனம் செலுத்தாததினால், கிளிநொச்சி பொருளாதார மையத்தில் கட்டப்பட்ட பாலத்தின் சமநிலை அம்பாறையில் செயல்படவில்லை. பாலம் சமநிலையில் பயணிக்க இயலாமையால் லொரிகள் பாவனைக்கு உட்படுத்தமுடியாவில்லை. | இந்த பால தராசுகள் நிர்மாணிப்பதற்கான சாத்திய கூறுகள் ஆய்வு செய்யப்படாததினால் இது எவ்வாறு செய்யப்பட்டது என்பது குறித்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது. | பெறுகை வழிகாட்டுதலின பிரகாரம் பிரிவு 2 இல் உபபிரிவு 2.3.1 இற்கு இணங்க வேண்டும், மேலும் இந்த பாலத்தராசுகள் திட்டத்திற்கு ஏற்ப ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) சபைக்கு சொந்தமான 11 களஞ்சியசாலைகள் சி/ச இலங்கை உர நிறுவனம் லிமிடெட் மற்றும் ஐந்து கடைகளை எந்த குத்தகை ஒப்பந்தமும் இல்லாமல் சி/ச கொழும்பில் உள்ள வணிக உர கம்பனி லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தன. மேலும் ஏழு களஞ்சியசாலைகள் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. குத்தகை காலம் 2007, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முடிவடைந்தது. ஆனால் புதிய குத்தகை ஒப்பந்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆயினும்கூட, அவர்கள் இன்னும் களஞ்சியசாலை வளாகத்தைப் பயன்படுத்துகிறார்கள். மேலும், 2019 நவம்பர் 15, ஆம் திகதியின் படி, நிலுவையில் உள்ள வாடகை ரூபா 3,749,288 பெறப்பட வேண்டியிருந்தது. | இலாப நோக்கமல்லாமல் அரசு மானிய உரத் திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கத்திற்காக விவசாய மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்கும் பணியில் நிறுவனம் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடை குத்தகை ஒப்பந்தங்கள் முறையான குத்தகை ஒப்பந்தங்களுடன் வழங்கப்பட வேண்டும் மற்றும் குத்தகை காலாவதிக்கு ஏற்ப குத்தகை ஒப்பந்தங்கள் கையாளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ)மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் சபையினால் பிரதான அரச வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவை ரூபா 11,419,664,165 ஆகவும் அதற்கான வட்டி ரூபா 1,227,689,922 ஆகவும் காணப்பட்டதுடன் வங்கி மேலதிகபற்று ரூபா 269,849,649 ஆகவும் கடனை மீளச் செலுத்துவதற்கான நிலுவைகள் காணப்பட்டன. மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் சபையிடம் ரூபா 377,702,910 வருமதியான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன் கூட்டுத், தொகையாக ரூபா 283,674,369 ஆக வங்கி நடைமுறைக் கணக்குகள் வங்கி மீதி காணப்பட்டது. காணப்பட்ட வங்கி சேமிப்புக்களைக் கொண்டு அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நெல் சந்தைப்படுத்தல் சபையினால் விவசாயி மற்றும் நுகர்வோரின் திருப்திக்கு அரசாங்க கொள்கைகளை செயல்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதே நேரத்தில் அரசாங்க கொள்கைகளின் கீழ் செயல்படுத்தப்படும் சில திட்டங்கள் இழப்புகளை சந்திக்க நேரிடலாம். தீர்வு தொடர்பாக அமைச்சரவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் திறைசேரியின் நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபை மத்திய வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டும் என்று திறைசேரியால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த கடன்கள் மற்றும் வட்டி தீர்ப்பனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு போதுமான நிதி திரத்தன்மை இல்லாததால், மேற்கண்ட அமைச்சரவை தீர்மானத்தினை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளது. | சேமிப்புக் கணக்கு மீதிகள்பு மற்றும் நடைமுறை வங்கி கணக்கு மீதிகள் ஆகியவற்றை வருமானமாக முதலீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) 2018 ஆம் ஆண்டில் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலமைக்கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் சபையின் கூட்டு மொத்த நட்டம் ரூபா 1,185.1 மில்லியனாக காணப்பட்டது. 2018ஆம் ஆண்டில் சபையின் தேறிய சொத்துக்களின் பெறுமதியினை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டும் போது ரூபா 13,266.65 மில்லியனாக ரூபா 717.96 மில்லியனினால் அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக திறைசேரியின் உதவிகளின்றி சபையினை தொடர்ந்து செயற்படுத்த முடியாதுள்ளது. | பரிசீலனையுடன் ஏற்றுக்கொள்கின்றோம். | குறைந்தபட்ச திறைசேரி விதிகளின் கீழ் சபையானது செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டின் நெல் ஒருங்கிணைப்பின் போது இனங்காணப்பட்ட இருப்பு பற்றாக்குறை 85,933,454 கிலோகிராமாக காணப்பட்டது அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 3,047,107,163 ஆக மதிப்பிடப்பட்டிருந்தன. அனுமதிக்கக்கூடிய இருப்பு பற்றாக்குறை அளவினை விட, மீதமுள்ள குறைபாடுகளுக்கு பொறுப்பான களஞ்சிய காப்பாளரியால் சரக்குகளை அடையாளம் கண்டு அவற்றிற்கான பெறுமதியினை மதிப்பிட்டு பெற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மொத்த குறைபாடுகள் குறித்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, இருப்பு குறைபாடுகள் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டு, விசாரணையின் பின்னர் அனுமதிக்கப்படக்கூடிய அளவைத் தவிர மீதமுள்ள குறைபாடுகளை களஞ்சிய பாதுகாவலர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இருப்பு குறைபாடுகளுடைய களஞ்சிய சாலைகளுக்கு பொறுப்பான களஞ்சிய காப்பாளர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்தது உரிய பற்றாக்குறை பெறுமதியினை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |